# 4 ஏமாற்றம்

ஒருநாள் இரையே கிடைக்காமல்
ஓநாய் ஒன்று அலைந்ததுவே
அருகில் ஏதோ குரல்கேட்க
அங்கே சென்று பார்த்ததுவே.



சின்னக் குழந்தை அழுதிடவே
சொன்னாள் தாயார் அதனிடத்தே
'உன்னை வெளியில் எறிந்திடுவேன்
ஓநாய் தின்ன விட்டிடுவேன்'.

தாயார் சொன்னது நிசமென்றும்
தனக்கு நல்ல உணவென்றும்
ஓநாய் எண்ணி அவ்விடத்தே
உட்கார்ந் திருந்தது, ஆவலுடன்.

அஞ்சி அந்தக் குழந்தையுமே
அழுகை நிறுத்திட அம்மாவும்
கொஞ்சி மகிழ்வுடன் கூறுகிறாள்
குழந்தை மனது குளிர்ந்திடவே.

'ஓநாய் வந்தால் உடனேயே
உதைத்துக் கொல்வோம் ' என்றிடவே
ஓநாய் கேட்டு உடல் நடுங்கி
ஓட்டம் பிடித்தது காட்டுக்கே.

- அழ. வள்ளியப்பா

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | இரை | - | ගොදුර |
| 2. | நிசம் | - | ඇත්ත |
| 3. | அஞ்சி | - | බයවී |
| 4. | அலைந்தது | - | ඇවිද්ද |
| 5. | ஆவல் | - | ආශාව |
| 6. | எறிந்திடுவேன் | - | වීසි කරමි |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. ஓநாய் அலைந்தமைக்குக் காரணம் யாது?
2. அழுத குழந்தையிடம் தாய் என்ன கூறினார்?
3. ஓநாய் என்ன எண்ணியது?
4. குழந்தை ஏன் அழுகையை நிறுத்தியது?
5. ஓநாய் நடுங்கி ஓடக் காரணம் என்ன?

### செயற்பாடு - I

- இப்பாடலைக் கதையாக எழுதுவோம்.
  **මෙම කවිය කථාන්තරයක් වශයෙන් ලියමු.**
- இப்பாடலை இசையுடன் பாடுவோம்.
  **මෙම කවිය රසවත්ව ගයමු.**

### செயற்பாடு - II

**பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுவோம். පහත සඳහන් සිංහල වචනවලට අදාළ දෙමළ වචන ලියමු**

1. රැවටීම ........................................
2. හැඬීම ........................................
3. හඬ ........................................
4. වෘකයා ........................................
5. ආශාවෙන් ........................................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - III

**ஓநாய் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுவோம்.**

**වෘකයා ගැන වාක්‍ය හතරක් ලියමු**

1. ..................................................................
2. ..................................................................
3. ..................................................................
4. ..................................................................

## மொழி வளம்

**ஒத்தகருத்துச் சொற்களை அறிவோம்.**

**සමාන පද හඳුනාගනිමු**

1. தாய் - அன்னை
2. ஆகாரம் - உணவு, சாப்பாடு
3. எண்ணி - நினைத்து
4. ஆவல் - ஆசை
5. மகிழ்வு - சந்தோசம்
6. மனது - உள்ளம்
7. அலைந்தது - திரிந்தது
8. உண்மை - சத்தியம், மெய், வாய்மை.

## இலக்கணம்

### திணை

**திணை**

**உயர்திணை**

வாசுகி
அரசன்
இந்திரன்
முருகன்
இராவணன்
கண்ணன்

**அஃறிணை**

அணில்
மாடு
சிங்கம்
புத்தகம்
மேசை
கதிரை

## செயற்பாடு - V

**பின்வரும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வேறுபடுத்தி எழுதுவோம்.** පහත සඳහන් වචන උසස් ගණ, පහත් ගණ යනුවෙන් වෙන් කර ලියමු.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண் | 6. | கதிரை |
| 2. | இந்திரன் | 7. | பந்து |
| 3. | பாடசாலை | 8. | பேனை |
| 4. | ஆசிரியர் | 9. | பூனை |
| 5. | மாணவர் | 10. | மாலதி |

## செயற்பாடு - VI

**தடித்த எழுத்திலுள்ள சொற்கள் உயர்திணையா அஃறிணையா என அடைப்புக்குறிக்குள் எழுதுவோம்.**

1. **ஓநாய்** ஒன்று அலைந்தது. (..............................)

2. **குழந்தை** அழுதது. (..............................)

3. **தாயார்** கூறினார். (..............................)

4. **அம்மா** குழந்தையைக் கொஞ்சினார். (..............................)

5. **யானை** காட்டுக்கு ஓட்டம் பிடித்தது. (..............................)

6. ‘ஏமாற்றம்’ என்ற பாடலை **அழ.வள்ளியப்பா** பாடினார். (..............................)

## செயற்பாடு - VII

**பின்வரும் உயர்திணைச் சொற்களை வைத்துச் சிறு வாக்கியங்கள் அமையுங்கள்.**

**පහත දී ඇති උසස් ගණ වචන යොදා වාක්‍ය හදමු.**

உதாரணம் :- **அதிபர்** வகுப்பறைக்கு வந்தார்.

1. மாணவி :- ............................................................
2. நண்பன் :- ............................................................
3. கமக்காரன் :- ............................................................
4. வைத்தியர் :- ............................................................
5. சுமன் :- ............................................................

## செயற்பாடு - VIII

**பின்வரும் அஃறிணைச் சொற்களை வைத்துச் சிறு வாக்கியங்கள் எழுதுங்கள்.**

**පහත දී ඇති පහත් ගණ වචන යොදා වාක්‍ය හදමු.**

உதாரணம் :- **அன்னப்பறவை** அழகானது.

1. யானை :- ............................................................
2. நாற்காலி :- ............................................................
3. மரம் :- ............................................................
4. புத்தகம் :- ............................................................



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக